**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 349/2019 |
| Name | : Chinna Murugan |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பெருமாள் புதுாரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு மாலை 07.00 மணியளவில் நானும், அம்மாபட்டியும் இயற்கை உபாதை கழிப்பதற்காக ஆனைமலை ரோட்டில் சென்று கொண்டிருந்த போது சபாபதி என்பவர் காட்டின் அருகே நல்லமுத்து என்பவர் எங்களுக்கு எதிராக கிழக்கிலிருந்து மேற்காக நடந்து வந்தார். அவருக்கு பின்னால் மைக் செட் கட்டி இருசக்கர வாகனம் ஓட்டி வந்த நபர் நல்லமுத்து மீது மோதிவிட்டு சென்றுவிட்டார். நல்லமுத்துவிக்கு தலை, கை மற்றும் கழுத்தில் காயம் ஏற்பட்டது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் கோவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நான் போலீஸ்க்கு தகவல் சொன்னேன். சில நாட்கள் கழித்து நல்லமுத்து இறந்துவிட்டார். இருட்டில் இருசக்கர வாகனத்தை ஓட்டியது யார் என்று தெரியவில்லை. போலீசார் விசாரித்து எதிரி தான் என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 349/2019 |
| Name | : | Ammapatti |
| P.W. | : | 2 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பெருமாள் புதுாரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு மாலை 07.00 மணியளவில் நானும், சின்ன முருகனும் இயற்கை உபாதை கழிப்பதற்காக கொமரலிங்கம் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டின் வடக்கே சென்று கொண்டிருந்த போது நல்லமுத்து என்பவர் எதிர் திசையில் மேற்கு நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் XL வாகனம் மைக் செட் கட்டி வந்து அவர் மீது மோதியது. வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது. இருட்டில் வாகனத்தை ஓட்டியது யார் என்று தெரியவில்லை. நல்லமுத்துவிற்கு தலை, கை, காலில் காயம் ஏற்பட்டது. அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நாங்கள் போலீசில் தகவல் சொன்னோம். நல்லமுத்து சில நாட்கள் கழித்து இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 349/2019 |
| Name | : Magudeeswaran |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சடையபாளையத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். எனது சின்ன மாமனார் நல்லமுத்து விபத்தில் இறந்துவிட்டார். உடுமலை அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் பிரேத விசாரணை செய்த போது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 349/2019 |
| Name | : | Thannasi |
| P.W. | : | 4 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பெருமாள் புதுாரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு காலை 8 மணிக்கு நானும், மயில்சாமியும் கொமரலிங்கம் சென்று கொண்டிருந்த போது போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். விபத்து நடந்த இடத்தை அவருக்கு அடையாளம் காட்டினேன். விசாரித்து என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் மயில்சாமி கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்